(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 117.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2016 நவெம்பர் 16, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

547/ ’16

1.
கௌரவ புத்திக பத்திரண,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் தங்கம் மற்றும் வெள்ளிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெருந்தொகையானோர் உள்ளனரென்பதையும்;

(ii) தங்கம் மற்றும் வெள்ளி விலையேற்றத்தினாலும் வேறு காரணங்களினாலும் இந்த கைத்தொழில் வீழ்ச்சியடைந்து வருகின்றதென்பதையும்;

(iii) இந்த கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தொழில்களை இழக்கவேண்டிய இடர்நேர்வு நிலவுகின்றதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(ஆ) (i) மேற்படி கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை யாது;

(ii) அந்த ஆட்களுக்கு புதிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்துகொள்ள அரசாங்கத்தினால் சலுகைகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், அச்சலுகைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தங்கம் மற்றும் வெள்ளி விலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளுமா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

647/ ’16

2.
கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) “யொவுன் புரய 2016” வைபவம் நடத்தப்படுவதன் நோக்கம் யாதென்பதையும்;

(ii) இதன் பிரச்சார நடவடிக்கைகளுக்காக ஏற்கப்படும் செலவினம் எவ்வளவென்பதையும்;

(iii) ஒவ்வொரு விளம்பர நிறுவனத்திற்கும் செலுத்திய தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) “யொவுன் புரய 2016” வைபவத்திற்கென செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை ஒவ்வொரு தலைப்பின் கீழ் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(v) இவ்வைபவத்தை நடத்தியதன் மூலம் அரசாங்கம் எதிர்ப்பார்த்த நோக்கங்கள் நிறைவேறியுள்ளதென திருப்தியடைகின்றாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

660/ '16

3.

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மாகாண சபைகளின் கீழ் இயங்கிவருகின்ற பாடசாலைகளின் ஒருசில அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவமாணவிகள் பல்வேறு அநீதிகளுக்கும் உடல் மற்றும் உளரீதியான சித்திரவதைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இன்றளவில் அவ்விதமாக உள மற்றும் உடல்ரீதியான துன்புறுத்தல்களுக்கு இலக்காகிய மாணவமாணவிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாணத்திற்கு ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு;

(ii) உள மற்றும் உடல்ரீதியான துன்புறுத்தல்களைத் தடுக்கவும் அவர்களின் ஒழுக்கம் நிறைந்த நடத்தைகள் பற்றியும் மாகாண முதலமைச்சருக்கு விழிப்புணர்வூட்டி அவருடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

709/ '16

4.

கௌரவ எஸ். வியாழேந்திரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதியிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட 100 நாள் வேலைத்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து இன்று வரை கல்வி அமைச்சில் சிற்றூழியர் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நியமனங்கள் வழங்கப்படுகையில் பரிசீலிக்கப்பட்ட தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறு எத்தனை நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) மேற்படி நியமனங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்துக்கமைய வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்படி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள தமிழ் சிற்றூழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

713/ '16

5.

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழில் நியாய மன்றங்களில் விண்ணப்பதாரி அல்லது பிரதிவாதி சார்பில் பிரதிநிதியொருவர் தோற்றுவதற்காக, கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் (திருத்திய) 46 வது பிரிவு மற்றும் மேற்படி சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளின்படி செயலாற்றுவதை மேற்கூறிய நியாய மன்றங்களின் நிகழ்கால தலைவர்கள் மறுப்பதற்கான காரணங்கள் யாவை;

(ii) ஊழியர்களுக்கு வசதியாகவும் குறைந்த செலவிலும் தமது வழக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏறக்குறைய 60 வருடகாலமாக நிலவிய சந்தர்ப்பத்தையும் நடைமுறையையும் திடீரென நிறுத்தியமையின் மூலம் அரசாங்கத்தின் தொழிலாளர்களுக்கெதிரான மனப்பான்மை உறுதிப்படுத்தப் பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(iii) இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பேரில் இந்நிலைமை உருவாக்கப்பட்டுள்ளதா;

(iv) நியாயமானதாகவும் சட்டத்தின் பிரகாரமும் முன்னர் இருந்த நிலைமைக்கு தொழில் நீதிமன்றங்களின் நடவடிக்கைகள் மீளநிறுவப்படாவிடின் சட்டத்தரணிகளை முன்வரச்செய்வதற்கு விண்ணப்பதாரிகளுக்கு சிரமமானதாக அமையுமென்பதை அறிவாரா;

(v) சட்ட உதவி ஆணைக்குழு மூலமாக அமுலாக்கப்படுகின்ற சட்டத்தரணிகளை வழங்கும் சட்ட உதவிச் சேவை பற்றி விண்ணப்பதாரிகளுக்கு நம்பிக்கை இல்லை என்பதை அறிவாரா;

(vi) இன்றேல், சந்தைப் பொருளாதாரக் கொள்கையில் முன்னர் நிலவிய ''சமூகம்'' என்ற பதம் இன்றளவில் நீங்கியுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

740/ '16

6.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில்,

(i) பதிவு செய்திருந்த ஊழியர் நம்பிக்கை நிதியக் (ETF) கணக்குகளின் எண்ணிக்கை;

(ii) புதிதாக பதிவு செய்துள்ள ஊ.ந.நி. (ETF) கணக்குகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் புதிதாக பதிவு செய்துள்ள ஊ.ந.நி. (ETF) கணக்குகளின் எண்ணிக்கை,

(i) அரசாங்கத்துக்கு உரித்தான கம்பனிகள்;

(ii) பகுதியளவிலான அரச நிறுவனங்கள்;

(iii) தனியார் துறை;

(iv) கைத்தொழில்துறை;

(v) விவசாயத்துறை;

(vi) சேவைத் துறை;

இற்கு அமைய ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

828/ '16

7.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹிங்குராண சீனித் தொழிற்சாலைக்கு சொந்தமான காணிகளில் கரும்புச் செய்கை மேற்கொள்ளப்படாத காலங்களிலும் கரும்புச் செய்கை செய்யப்படாத பகுதிகளிலும் மாற்றுப் பயிராக நெல் பயிரிட முடியுமென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) சீனிக் கைத்தொழிலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் நுரைச்சோலையாயவிலும் தீகவாபி வலயத்திலும் நெற் செய்கைக்கு நடவடிக்கை எடுக்க முடியுமென்பது அவதானிக்கப்பட்டுள்ளதா;

(iii) தற்போது ஹிங்குராண சீனிக் கம்பனியை முகாமைத்துவம் செய்கின்ற கல்ஓயா பெருந்தோட்டக் கம்பனியினால் கரும்புச் செய்கை தவிர்ந்த நெற் செய்கை அல்லது வேறு பயிர்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் காணிகள் மீள சுவீகரிக்கப்படுமென தெரிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளதை அறிவாரா;

(iv) கரும்புச் செய்கைக்கு பாதிப்பேற்படாத வகையில் நெல் பயிரிடும் விவசாயிகளின் காணிகளை பாதுகாக்கும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவாரா;

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

898/ ’16

8.

கௌரவ சமல் ராஜபக்ஷ,— கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 சிறுபோகம், பெரும்போகம் மற்றும் 2016 சிறுபோகம் ஆகிய மூன்று போகங்களில் கிடைத்த மொத்த நெல் விளைச்சல் எவ்வளவு;

(ii) இதில், நெல் சந்தைப்படுத்தல் சபை கொள்வனவு செய்த நெல்லின் அளவு ஒவ்வொரு மாவட்டம் மற்றும் களஞ்சியத்திற்கிணங்க வெவ்வேறாக எவ்வளவு;

(iii) சபையினால் ஒரு கிலோ நெல் கொள்வனவு செய்யப்பட்ட விலை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2016.07.31 ஆந் திகதியன்று மேற்படி களஞ்சியங்களில் எஞ்சியிருந்த நெல்லின் கையிருப்புத்தொகை எவ்வளவு;

(ii) மேற்படி களஞ்சியங்களிலிருந்து விற்பனை செய்யப்பட்டுள்ள நெல்லின் அளவு வெவ்வேறாக எவ்வளவு;

(iii) மேற்படி நெல் சந்தைப்படுத்தப்பட்ட ஆட்கள் அல்லது கம்பனிகள் மற்றும் அவர்களுக்கு நெல் சந்தைப்படுத்தப்பட்ட விலை யாது;

என்பதையும் அவர் இச்சபிக்கு அறிவிப்பாரா?

(இ) (i) சதொச மற்றும் பிற அரசாங்க நிறுவனங்களுக்கு விநியோகித்துள்ள நெல்லின் அளவு யாது;

(ii) ஆட்களுக்கும் கம்பனிகளுக்கும் நெல் விற்கப்பட்டமைக்கான காரணங்கள் யாவை;

(iii) விலங்குத் தீனிக்காகவும் மதுபான உற்பத்திக்காகவும் வழங்கப்பட்ட நெல்லின் அளவு மற்றும் சந்தைப்படுத்திய விலைகள் வெவ்வேறாக எவ்வளவு;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

911/ ’ 16

9.

கௌரவ பிரசன்ன ரணதுங்க,— சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 ஆம் ஆண்டு தொடக்கம் களனிப் பல்கலைக்கழகத்தில் பேச்சு மற்றும் செவிப்புலனியல் எனும் நான்கு ஆண்டு விசேட பட்டப் பாடநெறியொன்று ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

(ii) இப்பட்டப் பாடநெறி, முதலாம் ஆண்டின் பின்னர் பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சை, செவிப்புலனியல் என இரண்டு விஞ்ஞானமாணி விசேட பாடநெறிகளாக பெயரிடப்படுகின்றது என்பதையும்;

(iii) பேச்சு மற்றும் மொழிச் சிகிச்சையைக் கற்ற பட்டதாரிகள், மொழிச் சிகிச்சையாளர்களாக சுகாதார அமைச்சுக்கு ஆட்சேர்க்கப்படுகிறார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) செவிப்புலனியல் பட்டத்தை நிறைவு செய்த பட்டதாரிகளை சுகாதார அமைச்சுக்கு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

913/ ’16

10.

கௌரவ விஜித்த பேருகொட,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த ஐந்தாண்டு காலத்தினுள் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில்,

(i) தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை;

(ii) சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை;

(iii) சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை, மொத்த மாணவர்களின் எண்ணிக்கையின் சதவீதமாக;

(iv) சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கையில் மாணவர் உதவித்தொகை கிடைக்கும் மாணவர்களின் எண்ணிக்கை;

(v) சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கையில் பிரசித்திபெற்ற பாடசாலை களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை;

ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையின் போது சில பரீட்சை நிலையங்களில் பிரச்சினைகளும் குறைபாடுகளும் அறிக்கையிடப்பட்டன என்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா;

(ii) ஆமெனில், அத்தகைய சம்பவங்கள் அறிக்கையிடப்பட்ட பரீட்சை நிலையங்கள் யாவை;

(iii) அச்சம்பவங்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாவர்;

(iv) மேற்படி பொறுப்புக் கூறவேண்டிய ஆட்கள் தொடர்பில் முறைசார்ந்த விசாரணை நடாத்தப்படுமா;

(v) பிரச்சினைகளை எதிர்கொண்ட மாணவர்களுக்கு அநீதி ஏற்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா;

(vi) ஆமெனில், இம்மாணவர்களுக்கு நியாயம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

696/ ’16

11.

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பழவகைகளுக்காக வருடாந்தம் பெரும் தொகைப் பணம் செலவிடப்படுகின்றதென்பதையும்;

(ii) மேற்படி பழவகைகளை பதப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படுகின்ற இரசாயனப் பொருட்கள் நாட்டு மக்களின் சுகாதாரத்திற்குப் பாதகமானது என்பதையும்;

(iii) இறக்குமதி செய்யப்படுகின்ற அநேகமான பழவகைகளை இந்நாட்டில் பயிரிட முடியுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இந்நாட்டில் பயிரிடக்கூடியதாகவிருப்பினும், இறக்குமதி செய்யப்படுகின்ற பழவகைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பழவகைகளைப் பயிரிடுவதற்குத் தேவையான வசதிகளை விவசாயிகளுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எவ்வாறென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

764/ '16

12\.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மாத்தளை மாவட்டத்தில்,

(i) பதிவு செய்திருந்த ஊழியர் நம்பிக்கை நிதியக் (ETF) கணக்குகளின் எண்ணிக்கை;

(ii) புதிதாக பதிவு செய்துள்ள ஊ.ந.நி. (ETF) கணக்குகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் புதிதாக பதிவு செய்துள்ள ஊ.ந.நி. (ETF) கணக்குகளின் எண்ணிக்கை,

(i) அரசாங்கத்துக்கு உரித்தான கம்பனிகள்;

(ii) பகுதியளவிலான அரச நிறுவனங்கள்;

(iii) தனியார் துறை;

(iv) கைத்தொழில்துறை;

(v) விவசாயத்துறை;

(vi) சேவைத் துறை;

இற்கு அமைய ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

796/ ' 16

13\.

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹொரணை, கோனபல, ஒலபொடுவ தோட்டத்தை அண்டியதாக இத்தாலியைச் சேர்ந்த ஒரு கம்பனியும் இலங்கை உருக்கு தனியார் கம்பனியும் இணைந்து டயர் தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளப்படும் முதலீடு எவ்வளவென்பதையும்;

(iii) அதன் பொருட்டு சுவீகரித்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தனியார் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) காணிகளைச் சுவீகரித்துக்கொள்வதற்காக ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

697/ '16

14\.

கௌரவ புத்திக பத்திறண,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரக்கு சார்ந்த உற்பத்திக் கைத்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளவர்கள் தற்போது அக்கைத்தொழிலிலிருந்து விலகிச் செல்கின்றனர் என்பதையும்;

(ii) மூலப்பொருள் மற்றும் சந்தை தொடர்பாக பிரச்சினைகள் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) இக்கைத்தொழிலானது இந்நாட்டுக்கு பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தரக் கூடியதொன்றாகுமென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) அரக்கு சார்ந்த உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) ஆமெனில், 2015 ஆம் ஆண்டினுள் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்றுமதி வருமானம் யாதென்பதையும்;

(iii) ஏற்றுமதி செய்யப்படுவதில்லையெனில், ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) நாட்டினுள் அரக்கு சார்ந்த கைத்தொழிலுக்கு தேவையான சந்தையை விரிவுபடுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

765/ '16

15.

கௌரவ பிமல் ரத்நாயக்க,— தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மாத்தளை மாவட்டத்தில்,

(i) பதிவு செய்திருந்த ஊழியர் சேமலாப நிதியக் (EPF) கணக்குகளின் எண்ணிக்கை;

(ii) புதிதாக பதிவு செய்துள்ள ஊ.சே.நி. (EPF) கணக்குகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் புதிதாக பதிவு செய்துள்ள ஊ.சே.நி. (EPF) கணக்குகளின் எண்ணிக்கை,

(i) அரசாங்கத்துக்கு உரித்தான கம்பனிகள்;

(ii) பகுதியளவிலான அரச நிறுவனங்கள்;

(iii) தனியார் துறை;

(iv) கைத்தொழில்துறை;

(v) விவசாயத்துறை;

(vi) சேவைத் துறை;

இற்கு அமைய ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியே யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— 2016 நவெம்பர் மாதம் 19 ஆம் திகதி சனிக்கிழமை, 21 ஆம் திகதி திங்கட்கிழமை, 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 23 ஆம் திகதி புதன்கிழமை, 24 ஆம் திகதி வியாழக்கிழமை, 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 26 ஆம் திகதி சனிக்கிழமை, 28 ஆம் திகதி திங்கட்கிழமை, 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 30 ஆம் திகதி புதன்கிழமை மற்றும் 2016 டிசம்பர் மாதம் 01 ஆந் திகதி வியாழக்கிழமை, 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை, 03 ஆம் திகதி சனிக்கிழமை, 05 ஆம் திகதி திங்கட்கிழமை, 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 07 ஆம் திகதி புதன்கிழமை, 08 ஆம் திகதி வியாழக்கிழமை, 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் 10 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய நாட்கள் " ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2017)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாகுமாக.

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— பாராளுமன்றத்தின் 70(2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2017)" இனை பரிசீலிப்பதற்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2016, நவெம்பர் மாதம் 19 ஆம் திகதி சனிக்கிழமை முதல் 24 ஆம் திகதி வியாழக்கிழமை வரையும் மற்றும் 26 ஆம் திகதி சனிக்கிழமை முதல் 30 ஆம் திகதி புதன்கிழமை வரையும், 2016 திசெம்பர் 01 ஆம் திகதி வியாழக்கிழமையும் மற்றும் திசெம்பர் 03 ஆம் திகதி சனிக்கிழமை முதல் 08 ஆம் திகதி வியாழக்கிழமை வரையுமான நாட்களில் பாராளுமன்ற சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணிமுதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.00 மணி வரையும் இருக்குமாக. ஆயினும், பி.ப. 6.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 7(5) ஆம், (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2),— 70(2) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2017)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாளான 2016 நவெம்பர் மாதம் 25 ஆம் திகதி, திசெம்பர் 02 ஆம் திகதி மற்றும் திசெம்பர் 09 ஆம் திகதி ஆகிய வெள்ளிக்கிழமை நாட்களில் பாராளுமன்றச் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப.12.30 மணி வரையும் மற்றும் பி.ப 1.30 மணி முதல் பி.ப 7.00 மணி வரையும் இருக்குமாக. ஆயினும், பி.ப. 6.30 மணிக்கு 7ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் (5) ஆம் மற்றும் (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள் (இல. 3),— 70(2) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2017)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாளான 2016 திசெம்பர் மாதம் 10 ஆம் திகதி, சனிக்கிழமை பாராளுமன்றச் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப 1.00 மணி முதல் பி.ப 5.00 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2017) — (ஒதுக்கப்பட்ட நான்காம் நாள்) — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016, நவெம்பர் 10) [1].

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 108 (1) உறுப்புரையின் கீழ் உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளுக்கான சம்பளத்தில் திருத்தம் மேற்கொள்ளல் தொடர்பான பிரேரணை,— பத்தொன்பதாவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் ஊடாக திருத்தப்பட்டவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கான மாதாந்த சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

அதற்கிணங்க, பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்கான சம்பளங்களை 2016.01.01 ஆம் திகதி முதல் 2020.01.01 ஆம் திகதி வரை 05 கட்டங்களில் நடைமுறைப்படுத்தும் வகையில் திருத்தம் மேற்கொள்வதற்கான பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அட்டவணை I)

| **சேவைப்பிரிவு** | **சம்பளக் குறியீடு** | **சம்பள அளவுத் திட்டம் (ரூ)** |
|---|---|---|
| கௌரவ பிரதம நீதியரசர் | JS 5 – 2016 | 145,000 -5 X 7,250-181,250 |
| உயர் நீதிமன்ற நீதிபதிகள்/ மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் | JS 4 - 2016 | 135,000-5 X 6,750-168,750 |
| மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள் | JS 3 – 2016 | 131,500-5 X 6,575-164,375 |

புதிய சம்பள அளவுத் திட்டங்களை ஒவ்வொரு கட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கான சம்பள மாற்றம் பற்றிய அட்டவணையை அட்டவணை II ஆகவும் சம்பள அளவுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான அறிவுரையை அட்டவணை III ஆகவும் இத்துடன் சமர்ப்பிக்கப்படுவதுடன், பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்காக இந்தப் பிரேரணையின் மூலம் தீர்மானிக்கப்படும் சம்பள முறைமையை நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இலங்கை சனநாயக சோசலிக் குடியரசின் அரசியலமைப்பின் 108(1) உறுப்புரையின் பிரகாரம் இந்தப் பாராளுமன்றம் இத்தால் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

**அட்டவணை I**

**அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளுக்கான சம்பளத் திட்டம் – 2016**

| | சேவைப் பிரிவு | சம்பளக் குறியீடு | ஆரம்பப் படிநிலை | வருடங் கள் | சம்பள ஏற்றம் | உச்சளவு |
|---|---|---|---|---|---|---|
| 1 | மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள் | JS 3 - 2016 | 131,500 | 5 | 6,575 | 164,375 |
| 2 | உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர்கள் | JS 4 - 2016 | 135,000 | 5 | 6,750 | 168,750 |
| 3 | பிரதம நீதியரசர் | JS 5 - 2016 | 145,000 | 5 | 7,250 | 181,250 |

ஒப்பம்
தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு

## சம்பள அளவுத் திட்டங்கள்

சம்பள அளவுத் திட்டங்களின் ஒவ்வொரு நிரல்களின் ஊடாக காட்டப்படும் தகவல்கள் பின்வருமாறு,

நிரல் 1 - ஆண்டுகளின் எண்ணிக்கை

நிரல் 2 - சேவைக் காலம்

நிரல் 3 - தரம்

நிரல் 4 - நியமனத்தின்போது மற்றும் பதவி உயர்வு பெற்றிருப்பின் சம்பளப் படி நிலை

| சேவை வகை | | | மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் / மன்றாடி அதிபதி | பிரதம நீதி அரசர் |
|---|---|---|---|---|---|
| சம்பளக் குறியீட்டு இலக்கம் | | | JS 3-2016 | JS 4-2016 | JS 5-2016 |
| 1 | 2 | 3 | 4 | 4 | 4 |
| | | | 6,575 | 6,750 | 7,250 |
| | | | 5 | 5 | 5 |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| 1 | | | 131,500 | 135,000 | 145,000 |
| 2 | | | 138,075 | 141,750 | 152,250 |
| 3 | | | 144,650 | 148,500 | 159,500 |
| 4 | | | 151,225 | 155,250 | 166,750 |
| 5 | | | 157,800 | 162,000 | 174,000 |
| 6 | | | 164,375 | 168,750 | 181,250 |

ஒப்பம்

தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு

# சம்பள மாற்ற நிரல்

JS 3—2016

அட்டவணை II

| சம்பளப் படிநிலை | 2015.12.31 ஆம் திகதிக்கு | | 2016.01.01 ஆம் திகதிக்கு | | 2017.01.01 ஆம் திகதிக்கு | | 2018.01.01 ஆம் திகதிக்கு | | 2019.01.01 ஆம் திகதிக்கு | | 2020.01.01 ஆம் திகதிக்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அடிப்படை சம்பளம் (ரூ) | மொத்தச் சம்பளம் (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) |
| 1 | 63,500 | 85,525 | 77,100 | 8,425 | 90,700 | - | 104,300 | - | 117,900 | - | 131,500 | - |
| 2 | 66,675 | 89,176 | 80,955 | 8,221 | 95,235 | - | 109,515 | - | 123,795 | - | 138,075 | - |
| 3 | 69,850 | 92,828 | 84,810 | 8,018 | 99,770 | - | 114,730 | - | 129,690 | - | 144,650 | - |
| 4 | 73,025 | 96,479 | 88,665 | 7,814 | 104,305 | - | 119,945 | - | 135,585 | - | 151,225 | - |
| 5 | 76,200 | 100,130 | 92,520 | 7,610 | 108,840 | - | 125,160 | - | 141,480 | - | 157,800 | - |
| 6 | 79,375 | 103,781 | 96,375 | 7,406 | 113,375 | - | 130,375 | - | 147,375 | - | 164,375 | - |

ஒப்பம்
தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு

| சம்பளப் படிநிலை | 2015.12.31 ஆம் திகதிக்கு | | 2016.01.01 ஆம் திகதிக்கு | | 2017.01.01 ஆம் திகதிக்கு | | 2018.01.01 ஆம் திகதிக்கு | | 2019.01.01 ஆம் திகதிக்கு | | 2020.01.01 ஆம் திகதிக்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அடிப்படை சம்பளம் (ரூ) | மொத்தச் சம்பளம் (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படைசம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) |
| 1 | 65,000 | 87,250 | 79,000 | 8,250 | 93,000 | - | 107,000 | - | 121,000 | - | 135,000 | - |
| 2 | 68,250 | 90,988 | 82,950 | 8,038 | 97,650 | - | 112,350 | - | 127,050 | - | 141,750 | - |
| 3 | 71,500 | 94,725 | 86,900 | 7,825 | 102,300 | - | 117,700 | - | 133,100 | - | 148,500 | - |
| 4 | 74,750 | 98,463 | 90,850 | 7,613 | 106,950 | - | 123,050 | - | 139,150 | - | 155,250 | - |
| 5 | 78,000 | 102,200 | 94,800 | 7,400 | 111,600 | - | 128,400 | - | 145,200 | - | 162,000 | - |
| 6 | 81,250 | 105,938 | 98,750 | 7,188 | 116,250 | - | 133,750 | - | 151,250 | - | 168,750 | - |

ஒப்பம்
தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு

| சம்பளப் படிநிலை | 2015.12.31 ஆம் திகதிக்கு | | 2016.01.01 ஆம் திகதிக்கு | | 2017.01.01 ஆம் திகதிக்கு | | 2018.01.01 ஆம் திகதிக்கு | | 2019.01.01 ஆம் திகதிக்கு | | 2020.01.01 ஆம் திகதிக்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அடிப்படைச் சம்பளம் (ரூ) | மொத்தச் சம்பளம் (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) | அடிப்படை சம்பளம் (ரூ) | சீராக்கல் படி (ரூ) |
| 1 | 70,000 | 93,000 | 85,000 | 8,000 | 100,000 | - | 115,000 | - | 130,000 | - | 145,000 | - |
| 2 | 73,500 | 97,025 | 89,250 | 7,775 | 105,000 | - | 120,750 | - | 136,500 | - | 152,250 | - |
| 3 | 77,000 | 101,050 | 93,500 | 7,550 | 110,000 | - | 126,500 | - | 143,000 | - | 159,500 | - |
| 4 | 80,500 | 105,075 | 97,750 | 7,325 | 115,000 | - | 132,250 | - | 149,500 | - | 166,750 | - |
| 5 | 84,000 | 109,100 | 102,000 | 7,100 | 120,000 | - | 138,000 | - | 156,000 | - | 174,000 | - |
| 6 | 87,500 | 113,125 | 106,250 | 6,875 | 125,000 | - | 143,750 | - | 162,500 | - | 181,250 | - |

ஒப்பம்
தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழு

இணைப்பு I

சம்பள மீளமைப்பு – மாதிரிக் கடிதம்

எனது இல :
திகதி :

பெயர் :
பதவி:

**முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை ………… இணங்க 2016.01.01 ஆம் திகதிக்கான சம்பள மீளமைப்பு**

மேற்போந்த சுற்றறிக்கைப்படி தங்களின் சம்பளம் 2016.01.01 ஆம் திகதிக்கு பின்வருமாறு மீளமைக்கப்படுகின்றது.

1. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2006 ஆம் இலக்க வகுதிப்படுத்தலுக்கு அமைய 2015.12.31 ஆம் திகதிக்கு ஏற்புடையதான
   - (அ) சேவைத் தொகுதி :
   - (ஆ) சம்பள குறியீடு :
   - (இ) சம்பள அளவுத்திட்டம் :
   - (ஈ) சம்பள படிநிலை :
   - (உ) சம்பள நிலை : ரூபா
   - (ஊ) இறுதி சம்பள உயர்வுத் திகதி :
2. முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை …….. வகுதிப்படுத்தலுக்கு அமைய 2016.01.01 ஆம் திகதிக்கு அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு
   - (அ) சேவைத் தொகுதி :
   - (ஆ) சம்பள குறியீடு :
   - (இ) சம்பள அளவுத்திட்டம் :
   - (ஈ) சம்பள படிநிலை :
   - (உ) சம்பள நிலை : ரூபா.
3. அட்டவணை II இற்கு ஏற்ப 2016.01.01 ஆம் திகதிக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளம்
   - (அ) அடிப்படைச் சம்பளம் : ரூபா.
   - (ஆ) மொத்தச் சம்பளத்தினை சீராக்கல் படிகள்: ரூபா.
4. தவறான ஒரு வகுப்பீட்டின் கீழ் அல்லது கணிப்பீட்டுக் கோளாறின் கீழ் அல்லது வேறு ஏதாவது தவறின் காரணமாக அல்லது கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதெனத் தெரியவருமாயின், அத்தொகைகள் மீள அறவீடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

| தயாரித்தது : | | பரிசீலித்தது : | |
|---|---|---|---|
| கையொப்பம் | :…………………… | கையொப்பம் | :…………………… |
| பெயர் | :…………………… | பெயர் | :…………………… |
| பதவி | :…………………… | பதவி | :…………………… |
| திகதி | :…………………… | திகதி | :…………………… |

அங்கீகரித்தது :

கையொப்பம் :……………………………………………
பெயர் :……………………………………………
பதவி :……………………………………………
திகதி :……………………………………………
உத்தியோகபூர்வ முத்திரை :………………………….

பிரதிகள் :- 1……………………………………………
2……………………………………………

இணைப்பு II

சம்பள மீளமைப்பு – மாதிரிக் கடிதம்

எனது இல :
திகதி :

பெயர் :
பதவி:

**முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை ………… இணங்க 2017.01.01 ஆம் திகதிக்கான சம்பள மீளமைப்பு**

மேற்போந்த சுற்றறிக்கைப்படி தங்களின் சம்பளம் 2017.01.01 ஆம் திகதிக்கு பின்வருமாறு மீளமைக்கப்படுகின்றது.

1. முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை …….. வகுதிப்படுத்தலுக்கு அமைய 2016.12.31 ஆம் திகதிக்கு,

   (அ) சேவைத் தொகுதி :
   (ஆ) சம்பள குறியீடு :
   (இ) சம்பள அளவுத்திட்டம் : ரூபா.
   (ஈ) அட்டவணை I இற்கு இணங்க சம்பள நிலை : ரூபா
   (உ) அட்டவணை II இற்கு இணங்க சம்பள நிலை : ரூபா
   (ஊ) அட்டவணை II இற்கு ஏற்ப சம்பள படிமுறை :
   (எ) இறுதிச் சம்பள உயர்வுத் திகதி :

2. அட்டவணை II இற்கு ஏற்ப 2017.01.01 ஆம் திகதிக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளம் ரூபா,

3. தவறான ஒரு வகுப்பீட்டின் கீழ் அல்லது கணிப்பீட்டுக் கோளாறின் கீழ் அல்லது வேறு ஏதாவது தவறின் காரணமாக அல்லது கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதெனத் தெரியவருமாயின், அத்தொகைகள் மீள அறவீடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

| தயாரித்தது : | | பரிசீலித்தது : | |
|---|---|---|---|
| கையொப்பம் | :......................... | கையொப்பம் | :......................... |
| பெயர் | :......................... | பெயர் | :......................... |
| பதவி | :......................... | பதவி | :......................... |
| திகதி | :......................... | திகதி | :......................... |

அங்கீகரித்தது :

கையொப்பம் :.................................................
பெயர் :.................................................
பதவி :.................................................
திகதி :.................................................
உத்தியோகபூர்வ முத்திரை :……………..................…..

பிரதிகள் :- 1……………………………………………
2……………………………………………

இணைப்பு III

சம்பள மீளமைப்பு – மாதிரிக் கடிதம்

எனது இல :
திகதி :

பெயர் :
பதவி:

**<u>முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை ………… இணங்க 2018.01.01 ஆம் திகதிக்கான சம்பள மீளமைப்பு</u>**

மேற்போந்த சுற்றறிக்கைப்படி தங்களின் சம்பளம் 2018.01.01 ஆம் திகதிக்கு பின்வருமாறு மீளமைக்கப்படுகின்றது.

1. முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கை …….. வகுதிப்படுத்தலுக்கு அமைய 2017.12.31 ஆம் திகதிக்கு,

   (அ) சேவைத் தொகுதி :
   (ஆ) சம்பள குறியீடு :
   (இ) சம்பள அளவுத்திட்டம் : ரூபா.
   (ஈ) அட்டவணை I இற்கு இணங்க சம்பள நிலை : ரூபா
   (உ) அட்டவணை II இற்கு இணங்க சம்பள நிலை : ரூபா
   (ஊ) அட்டவணை II இற்கு ஏற்ப சம்பள படிமுறை :
   (எ) இறுதிச் சம்பள உயர்வுத் திகதி :

2. அட்டவணை II இற்கு ஏற்ப 2018.01.01 ஆம் திகதிக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளம்: ரூபா,

3. தவறான ஒரு வகுப்பீட்டின் கீழ் அல்லது கணிப்பீட்டுக் கோளாறின் கீழ் அல்லது வேறு ஏதாவது தவறின் காரணமாக அல்லது கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதெனத் தெரியவருமாயின், அத்தொகைகள் மீள அறவீடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

| தயாரித்தது : | | பரிசீலித்தது : | |
|---|---|---|---|
| கையொப்பம் | :......................... | கையொப்பம் | :......................... |
| பெயர் | :......................... | பெயர் | :......................... |
| பதவி | :......................... | பதவி | :......................... |
| திகதி | :......................... | திகதி | :......................... |

அங்கீகரித்தது :

கையொப்பம் :..................................................
பெயர் :..................................................
பதவி :..................................................
திகதி :..................................................
உத்தியோகபூர்வ முத்திரை :…………….................……..

பிரதிகள் :- 1……………………………………………
2……………………………………………

இணைப்பு IV

சம்பள மீளமைப்பு – மாதிரிக் கடிதம்

எனது இல :
திகதி :

பெயர் :
பதவி:

**முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை ………… இணங்க 2019.01.01 ஆம் திகதிக்கான சம்பள மீளமைப்பு**

மேற்போந்த சுற்றறிக்கைப்படி தங்களின் சம்பளம் 2019.01.01 ஆம் திகதிக்கு பின்வருமாறு மீளமைக்கப்படுகின்றது.

1. முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை …….. வகுதிப்படுத்தலுக்கு அமைய 2018.12.31 ஆம் திகதிக்கு,

    (அ) சேவைத் தொகுதி :

    (ஆ) சம்பள குறியீடு :

    (இ) சம்பள அளவுத்திட்டம் : ரூபா.

    (ஈ) அட்டவணை I இற்கு இணங்க சம்பள நிலை : ரூபா

    (உ) அட்டவணை II இற்கு இணங்க சம்பள நிலை : ரூபா

    (ஊ) அட்டவணை II இற்கு ஏற்ப சம்பள படிமுறை :

    (எ) இறுதிச் சம்பள உயர்வுத் திகதி :

2. அட்டவணை II இற்கு ஏற்ப 2019.01.01 ஆம் திகதிக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளம்: ரூபா,

3. தவறான ஒரு வகுப்பீட்டின் கீழ் அல்லது கணிப்பீட்டுக் கோளாறின் கீழ் அல்லது வேறு ஏதாவது தவறின் காரணமாக அல்லது கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதெனத் தெரியவருமாயின், அத்தொகைகள் மீள அறவீடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

| தயாரித்தது : | | பரிசீலித்தது : | |
|---|---|---|---|
| கையொப்பம் | :......................... | கையொப்பம் | :......................... |
| பெயர் | :......................... | பெயர் | :......................... |
| பதவி | :......................... | பதவி | :......................... |
| திகதி | :......................... | திகதி | :......................... |

அங்கீகரித்தது :

கையொப்பம் :..................................................

பெயர் :..................................................

பதவி :..................................................

திகதி :..................................................

உத்தியோகபூர்வ முத்திரை :……………...................…..

பிரதிகள் :- 1……………………………………………
2……………………………………………

இணைப்பு V

சம்பள மீளமைப்பு – மாதிரிக் கடிதம்

எனது இல :
திகதி :

பெயர் :
பதவி:

<u>முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை ………… இணங்க 2020.01.01 ஆம் திகதிக்கான சம்பள மீளமைப்பு</u>

மேற்போந்த சுற்றறிக்கைப்படி தங்களின் சம்பளம் 2020.01.01 ஆம் திகதிக்கு பின்வருமாறு மீளமைக்கப்படுகின்றது.

1. முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை …….. வகுதிப்படுத்தலுக்கு அமைய 2019.12.31 ஆம் திகதிக்கு,
   - (அ) சேவைத் தொகுதி :
   - (ஆ) சம்பள குறியீடு :
   - (இ) சம்பள அளவுத்திட்டம் : ரூபா.
   - (ஈ) அட்டவணை I இற்கு இணங்க சம்பள நிலை : ரூபா
   - (உ) அட்டவணை II இற்கு இணங்க சம்பள நிலை : ரூபா
   - (ஊ) அட்டவணை II இற்கு ஏற்ப சம்பள படிமுறை :
   - (எ) இறுதிச் சம்பள உயர்வுத் திகதி :

2. அட்டவணை II இற்கு ஏற்ப 2020.01.01 ஆம் திகதிக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளம்: ரூபா,

3. தவறான ஒரு வகுப்பீட்டின் கீழ் அல்லது கணிப்பீட்டுக் கோளாறின் கீழ் அல்லது வேறு ஏதாவது தவறின் காரணமாக அல்லது கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதெனத் தெரியவருமாயின், அத்தொகைகள் மீள அறவீடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

| தயாரித்தது : | | பரிசீலித்தது : | |
|---|---|---|---|
| கையொப்பம் | :......................... | கையொப்பம் | :......................... |
| பெயர் | :......................... | பெயர் | :......................... |
| பதவி | :......................... | பதவி | :......................... |
| திகதி | :......................... | திகதி | :......................... |

அங்கீகரித்தது :

| | |
|---|---|
| கையொப்பம் | :................................................. |
| பெயர் | :................................................. |
| பதவி | :................................................. |
| திகதி | :................................................. |

உத்தியோகபூர்வ முத்திரை :…………..................…..

பிரதிகள் :- 1……………………………………………
2……………………………………………

**அட்டவணை III**

## அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்ற மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளுக்கான சம்பளத் திட்டம் - 2016

2006.04.25 ஆம் திகதிய 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மற்றும் அதில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளுக்காக நடைமுறைப்படுத்தப்படும் சம்பள அளவுத் திட்டங்களுக்குப் பதிலாக அந்தச் சுற்றறிக்கையின் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள புதிய சம்பள அளவுத் திட்டங்களை 2016.01.01 ஆம் திகதி முதல் 05 கட்டங்களாக அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நடைமுறைப் படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

**02. புதிய சம்பள அமைப்பினுள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது.**

(i) 2011.12.12 ஆந் திகதிய 31/2011 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2012.12.31 ஆந் திகதிய 18/2012 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இற்கமைய செலுத்தப்படும் ஓய்வூதியத்திற்கு உரித்தற்ற விசேட கொடுப்பனவு

(ii) 2014.11.12 ஆந் திகதிய 24/2014 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2014.12.31 ஆம் திகதிய 24/2014(I) ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2015.02.11 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 05/2015 இற்கமைய மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்படும் ரூபா 10,000/- இடைக்காலக் கொடுப்பனவு.

**03. சம்பள மீளமைப்பு**

03.1 தற்போதுள்ள சம்பள அளவுத் திட்டங்களில் இருந்து புதிய சம்பள அளவுத் திட்டங்களுக்கு சம்பள மீளமைப்புச் செய்வது படிநிலைக்கு படிநிலை வைத்தல் முறையின் கீழ் மேற்கொள்ளல் வேண்டும். இருப்பினும் இச் சம்பளத் திருத்தம் 05 கட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படுவதால், அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ள திருத்தம் செய்யப்பட்ட அட்டவணைக்கமைய மீளமைப்புச் செய்தல் வேண்டும்.

03.2 சம்பள மாற்றியமைப்பைத் தயாரிப்பதற்கு வசதியாக அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள சகல சம்பள அளவுத் திட்டங்களுக்கும் வெவ்வேறான மீளமைப்பு அட்டவணைகள் அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ளது.

03.3 சம்பள மாற்றியமைப்பை மேற்கொள்ளும் போது, 2015.12.31 ஆந் திகதியன்று நிலவும் சம்பள அமைப்பின் கீழ் ஏற்புடையதான சம்பளக் குறியீட்டை முதலில் இனங்காணல் வேண்டும். அதற்கமைய இச்சுற்று நிருபத்தின் அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள நேரோத்த சம்பளக் குறியீடு மற்றும் அதற்குரிய அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள மீளமைப்பு அட்டவணையைத் தெரிவு செய்துகொள்ளல் வேண்டும். 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளக் குறியீடுகளுக்கு நேரொத்த இந்த சுற்றறிக்கையின் கீழான புதிய சம்பளக் குறியீடுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| அ.நி.சு. 06/2006 இற்கமைய சம்பளக் குறியீடு | புதிய சம்பளக் குறியீடு |
|---|---|
| SF 4 – 2006 | JS 5 - 2016 |
| SF 2 – 2006 | JS 4 - 2016 |
| SF 1 – 2006 | JS 3 - 2016 |

03.4 உரிய மீளமைப்பு அட்டவணைக்கமைய 2015.12.31 ஆந் திகதிக்கு ஏற்புடையதான சம்பளப் படிநிலைக்கு நேரொத்த 2016.01.01 ஆந் திகதிக்குரிய சம்பளப் படிநிலைக்கமைய ஏற்புடைய சம்பளப் படிநிலையில் அமர்த்தல் வேண்டும். இதன் பொருட்டு இச்சுற்று நிருபத்தில் இணைப்பு I ஆகக் காணப்படும் சம்பள மீளமைப்புப் படிவத்தை பயன்படுத்தல் வேண்டும்.

03.5 மேலே 03.4 இல் பின்பற்றிய முறைக்கமைய, 2017.01.01, 2018.01.01, 2019.01.01 மற்றும் 2020.01.01 போன்ற திகதிகளில் எதிர்கால சம்பள மீளமைப்புக்களை மேற்கொள்ளல் வேண்டும். இதற்காக அட்டவணை II இல் ஒவ்வொரு ஆண்டின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளப் படிநிலைகளை ஏற்புடையதாக்கிக்கொள்ளல் வேண்டும். இந்த மீளமைப்புக்காக ஒவ்வொரு ஆண்டிற்கும் இணைப்பு II, III, IV மற்றும் V எனக் காணப்படும் படிவங்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

**04. சம்பள ஏற்றத்தைக் கணக்கிடல்.**

04.1 சம்பள அளவுத் திட்டத்தினுள் சம்பள ஏற்றத்தைக் கணக்கிடல்

2016.01.01 ஆம் திகதி முதல் 2016.12.31 ஆம் திகதி வரையிலான காலத்தினுள் சம்பள ஏற்றத்தை உழைத்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் மேலே 03.4 இல் அமைக்கப்பட்ட சம்பளப் படி நிலைக்கு அடுத்த உயர்ந்த சம்பளப் படிநிலையில் வைத்தல் வேண்டும். இதற்கமைய 2016 ஆம் ஆண்டிற்குரிய சம்பள ஏற்றத்தின் பெறுமதியாக உரிய சம்பளப் படிநிலைகள் இரண்டிற்கும் இடையில் உள்ள வேறுபாட்டைக் கருதுதல் வேண்டும்.

04.2 சம்பள அளவுத் திட்டத்தின் உச்சளவைத் தாண்டி சம்பள ஏற்றத்தை வழங்குதல்

(அ) சம்பள அளவுத் திட்டமொன்றில் உச்ச நிலையை அடைந்திருக்கும் போது 2016.01.01 ஆம் திகதி முதல் ஏற்புடைய சம்பளப் படிநிலையைத் தீர்மானிப்பதற்காக அட்டவணை II இல் குறிப்பிட்ட சம்பள மாற்றல் அட்டவணையில் உரிய நிரலில் சம்பள அளவுத்திட்டத்தின் இறுதியில் இருக்கும் சம்பளப் படிநிலைகளுக்கிடையிலான வேறுபாட்டை சம்பள ஏற்றமாகக் கருதி சம்பளப் படிநிலையைக் கணக்கிடல் வேண்டும்.

(ஆ) 2016.01.01 ஆம் திகதியின் பின்னர் சம்பள அளவுத்திட்டத்தின் உச்சளவையும் தாண்டி சம்பள ஏற்றத்தை உழைத்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தின்போதும் மேலே (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ஏற்புடைய சம்பளப் படி நிலையை கணக்கிடல் வேண்டும்.

**05. மொத்த சம்பளத்தின் சீராக்கல் படி,**

05.1 அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக மேற்காண் 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள படிகளுடன் 2015.12.31 ஆம் திகதியன்று பெற்ற மொத்தச் சம்பளம் மற்றும் இந்தச் சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிடப் பட்டுள்ள ஒவ்வொரு ஆண்டிற்குமுரிய அடிப்படைச் சம்பளத்திற்குட்கிடையிலான வேறுபாடு மொத்தச் சம்பளத்தின் சீராக்கல் படியாக கணக்கிடப்பட்டு அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, ஒவ்வொரு ஆண்டிற்கும் உரிய அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக அதனுடன் நேரொத்த சீராக்கல் படியையும் செலுத்த வேண்டும். இந்த சீராக்கல் படி இங்கு கீழே 16 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அலுவல் தவிர வேறு எந்தவொரு அலுவலுக்காகவும் சம்பளத்தின் ஒரு பகுதியாகக் கருதுதல் கூடாது.

05.2 மேலே 04.2 இன் பிரகாரம் உச்சளவுக்கு அப்பால் சம்பளப் படிநிலையை கணிப்பீடு செய்யும் சந்தர்ப்பமொன்றின்போது அப் படிநிலைக்குரிய மொத்த சம்பளத்தில் சீராக்கல் படியையும் செலுத்துதல் வேண்டும். இதன் பொருட்டு முதலில் 2015.12.31 ஆந் திகதியன்று அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 அல்லது அதற்குத் திருத்தமாக வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்களின் கீழ் பெற்ற சம்பளப் படிநிலை மற்றும் இச்சுற்றுநிருபத்தின் இரண்டாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்று நிருபங்களின் மூலம் உரித்தான படிகளை மாத்திரம் உள்ளடக்கிய மொத்தச் சம்பளத்தைக் கணித்தல் வேண்டும். இச் சம்பளம் மற்றும் மேற்படி 04.2 இன் கீழ் கணிக்கிடப்பட்ட சம்பளப் படி நிலைக்கும் இடையில் நிதி ரீதியாக அனுகூலமற்றதாயிருப்பின், அப்பெறுமதியினை மொத்தச் சம்பளத்தின் சீராக்கல்படியாக உரிய சம்பளத்துடன் செலுத்துதல் வேண்டும்.

## 06. பதவி உயர்வின் போது சம்பளத்தை மீளமைத்தல்

இந்த கட்ட முறையின் கீழ் சம்பளத்தை மீளமைக்கும் காலத்தினுள் (2016.01.01 முதல் 2020.01.01 வரை) பதவி உயர்வொன்றைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பமொன்றின் போது அந்தப் பதவி உயர்வுக்குரித்தான சம்பள மீளமைப்புக்களின் போது அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள அந்தப் பதவி உயர்வுகள் அமுல்படுத்தப்படும் ஆண்டிற்குரிய நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளப் படிநிலையைகளையே ஏற்புடையதாக்கிக்கொள்ளல் வேண்டும்.

## 07. ஏனைய படிகள்

07.1 இச் சுற்று நிருபத்தில் இரண்டாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின் ஊடாக வழங்கப்பட்டுள்ள படிகளை உள்ளடக்கிய வகையில் புதிய சம்பள அமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளதால், 2016.01.01 ஆந் திகதி தொடக்கம் இப்படிகளைக் கொடுப்பனவு செய்தல் நிறுத்தப்படல் வேண்டும்.

07.2 2013.12.31 ஆந் திகதிய 37/2013 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்தம் செலுத்தப்படும் ரூபா 7,800/- வாழ்க்கைச் செலவுப் படி தொடர்ந்தும் செலுத்தப்படல் வேண்டும்.

## 08. ஓய்வூதியம்

08.1 இச் சுற்றறிக்கையின் ஊடாக வெளியிடப்படும் சம்பள அமைப்பின் பிரகாரம் 2016.01.01 ஆம் திகதியின் பின்னர் இளைப்பாறும் ஓய்வூதியக்காரர்களின் பொருட்டு ஓய்வூதியத்தைக் கணக்கிடும்போது அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவர்கள் இறுதியாகப் பெற்ற சம்பளப் படிநிலையை ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும்.

08.2 அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டங்கள் 2020.01.01 ஆந் திகதி தொடக்கம் முழுமையாகச் செயற்பட ஆரம்பித்ததும் 2016.01.01 ஆந் திகதியின் பின்னர் இளைப்பாறும் ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியத்தையும் அவ்வாறு திருத்தம் செய்யப்படுவதுடன், இது தொடர்பாக அறிவுரைகள் பின்னர் வெளியிடப்படும். 2016.01.01 ஆந் திகதி தொடக்கம் 2019.12.31 வரையிலான காலத்தினுள் ஓய்வூதியம் தொடர்பாக திருத்தங்கள் மேற்கொள்ளப்பட மாட்டாது.

08.3 2015.02.11 ஆந் திகதிய, 05/2015 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்று நிருபத்தின் பிரகாரம் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு செலுத்தப்படும் மாதத்திற்கு ரூபா 3,500 இடைக்காலக் கொடுப்பனவு இச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016.01.01 ஆம் திகதியின் பின்னர் இளைப்பாறுபவர்களுக்கு செலுத்தப்படலாகாது. இருப்பினும் 2013.12.31 ஆந் திகதிய 37/2013 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்று நிருபத்திற்கமைய ஓய்வூதியக்காரர்களின் பொருட்டு செலுத்தப்படும் மாதம் ஒன்றிற்கு ரூபா 3,525 ஆன வாழ்க்கைச் செலவுப் படி செலுத்தப்படல் வேண்டும்.

**09. சம்பளத்தின் சதவீதமாகச் செலுத்தப்படும் படிகள்**

சம்பளத்தின் சதவீதமாகச் செலுத்தப்படும் படியினை 2015.12.31ஆந் திகதியன்று நிலவிய நிதி ரீதியான பெறுமதிக்கு வரையறுத்தல் வேண்டும். 2016.01.01 ஆந் திகதியின் பின்னர் இந்தச் சுற்றறிக்கை ஏற்புடையதாகும் பதவியொன்றுக்கு நியமிக்கப்படும்போது படியை கணக்கிடுவதற்காக அப்பதவிக்கு 2015.12.31 ஆந் திகதியன்று நிலவிய சம்பளத்தை அடிப்படையாகக் கொள்ளல் வேண்டும்.

**10. நியமனக் கடிதங்களில் சம்பள அளவுத்திட்டத்தைக் குறிப்பிடல்**

இச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அமைப்பு முழுமையாகச் செயற்படுத்தப்படும் 2020.01.01 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புக்கள் / பதவி உயர்வுகளின் போது வழங்கப்படும் நியமனக் கடிதங்களில் சம்பள அளவுத்திட்டத்தைக் குறிப்பிடும்போது, அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிய சம்பள அளவுத் திட்டத்தை ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும். இருப்பினும் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலுத்துகைகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமாதலால் அது பற்றியும் அந்நியமனக் கடிதங்களில் குறிப்பிடல் வேண்டும்.

**11. பதவி / சேவை வகைப்படுத்தல்**

நீதிமன்ற உத்தியோகத்தர்கள் 2016.02.25 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ள பதவி வகைப்படுத் தலுக்கமைய சிரேஷ்ட நிலைக்குச் சமமாவதுடன், பதவி நிலை உத்தியோகத்தர்களாகக் கருதப்படுவர்.

**12. விதவைகள் / தாபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்புத் தொகை**

விதவைகள் / தாபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்புப் தொகை அடிப்படைச் சம்பளத்தின் 7% எனும் சதவீதம் தொடர்ந்தும் மாற்றமின்றி செயற்படுத்தப்படல் வேண்டும். அட்டவணை II இன் கீழ் ஒவ்வொரு ஆண்டிற்கும் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைச் சம்பளத்தை ஏற்புடையதாக்கிக் கொள்ளல் வேண்டும்.

**13. சம்பள ஏற்றத் திகதி**

இந்த சம்பள மீளளமைப்புக் காரணத்தால் சம்பள ஏற்றத் திகதியில் மாற்றங்கள் ஏற்படாது.

**14. சம்பள அளவுத் திட்டத்தின் உச்சளவுக்கு அப்பால் சம்பள ஏற்றத்தை செலுத்துதல்**

சம்பள அளவுத் திட்டத்தின் உச்சளவை அடைந்துள்ள உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெறும் திகதி வரை அல்லது வேறொரு சம்பள அளவுத்திட்டத்திற்குரிய பதவியொன்றில் நியமிக்கப்படும் / பதவி உயர்வு பெறும்வரை தொடர்ந்தும் சம்பள ஏற்றங்களை வழங்க முடியும்.

**15. இணைந்த படி**

இணைந்த படி ரூபா 500.00 ஆகும்.

**16. கடன் / முற்பணத்தை வழங்கும்போது மாதாந்த மொத்தக் கழிவுகளின் எல்லை**

அரச உத்தியோகத்தரொருவர் கடன் / முற்பணத்தைப் பெற்றுக் கொள்ளும் போது கருத்திற்கொள்ளும் 40% எல்லையைக் கணிக்கிடும்போது அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள அன்றைய தினத்தின் அடிப்படைச் சம்பளம் மற்றும் சீராக்கல் படியை ஏற்புடையதாக்கிக்கொள்ள வேண்டும்.

**17. பொது அறிவுரைகள்**

இச் சுற்றறிக்கைக்கமைய, 2016.01.01 ஆம் திகதியன்று உரித்தான சம்பளத்தை தீர்மானிக்கும் போது 2006.01.01 ஆம் திகதி அல்லது அத்தினத்திற்குப் பின்னர் சம்பளத்தில் மேற்கொண்ட திருத்தங்களுக்கமைய சம்பளத்தை தயாரித்தல் மற்றும் ஏற்புடைய சம்பள மீளமைப்பு சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளதென உரிய அதிகாரிகள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

**18. மேலதிகமாகச் செலுத்தப்படல்**

இந்த அறிவுரைகளை தவறான முறையில் விளங்கிக் கொள்வதன் காரணமாக அல்லது ஆவணங்களின் பிழைகள் காரணமாக அல்லது கணக்கிடும் போது ஏற்படும் தவறுகள் காரணமாக அல்லது வேறேதும் தவறுகள் காரணமாக எவராவதொரு உத்தியோகத்தருக்கு மேலதிகத் தொகையொன்று செலுத்தப்பட்டிருப்பின் அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையை மீளச் செலுத்துவதற்கு அந்த உத்தியோகத்தர் கட்டுப்பட்டுள்ளார்.

**19. தெளிவுபடுத்திக் கொள்ளல் மற்றும் மேலதிக அறிவுரைகள்**

இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் சம்பந்தமாக விளக்கங்கள் மற்றும் மேலதிக அறிவுரைகள் எதிர்பார்க்கப்படின், அவ்வாறான கோரிக்கைகளை திறைசேரிச் செயலாளர், பொதுத் திறைசேரி, நிதி அமைச்சு, கொழும்பு 01 எனும் முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

* 3.

மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்,— இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை சட்டத்தின் 36 ஆம் பிரிவு (2) ஆம் உப பிரிவின் (ஈ) மற்றும் (உ) பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 யூன் மாதம் 15 ஆம் திகதிய 1971/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் நீதியரசரின் ஒருமைப்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2016 மே 16 ஆம் திகதிய 1967/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.10.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (1) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய 1981/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.10.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) 32 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 22 ஆம் பிரிவின் கீழ், வெளிநாட்டு மதுபான இறக்குமதி மற்றும் அவற்றின் மீது மதுவரியினை விதித்தல் தொடர்பிலான சட்டதிட்டங்களை விதிப்பது தொடர்பாக, நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய 1981/87 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.10.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(989 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கட்டளை (இல. 1),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 1980/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.10.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

நிதி அமைச்சர்,— உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கட்டளை (இல. 2),— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான உற்பத்தி வரி தொடர்பில் நிதி அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2016 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய 1980/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2016.10.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

மருத்துவம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

இலங்கைப் பொறியியற் பேரவை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— "இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 15.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி 26 ஆம் திகதிய 1903/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

16.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---